**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT JUDGE AT PUDUCHERRY**

**<u>M.A.C.T.O.P. No. 1418/2022</u>**

Deposition of DW1 E. Narayanamurthy

| | | |
|---|---|---|
| Name | : | E. Narayanamurthy |
| Father's/Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Profession | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the **05.08.2026.**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகளை அறிவேன். அவற்றை என் சாட்சியத்தின் அங்கமாக வாசிக்க பிராத்திக்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**<u>மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நான் என்ன பதவியில் உள்ளேன் என்றால் திண்டிவனம் பணிமனை கிளை மேலாளராக உள்ளேன். இவ்வழக்கில் சாட்சியம் சொல்ல எனக்கு அங்கீகார கடிதம் வழுங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. விபத்து தொடர்பாக நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்தபோது பேருந்தில் பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துநர் உடல்நிலை சரியில்லாமல் இறந்தார்கள் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பேருந்து சரியாக சென்றுகொண்டிருந்ததாகவும், ஆட்டோ ஓட்டுநர் மது

அருந்திய நிலையில் மாறிமாறி சாலையில் ஓட்டி வந்து பேருந்தின் முன்புறம் இடித்துவிட்டதாகவும் சொல்லியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல. ஆட்டோ ஓட்டுநர்தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஆட்டோவை ஓட்டி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்று கூறியுள்ளதும் உண்மை அல்ல என்றால் சரியல்ல. ஆட்டோ ஓட்டுநர் இறந்த காரணத்தினால் முதல் தகவல் அறிக்கை பேருந்து ஓட்டுநர் மீது பதிவு செய்துள்ளதாக நான் சொல்லியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்காத காரணத்தால் விபத்து தொடர்பாக நான் சொல்லியுள்ள சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு காரணம் பேருந்து ஓட்டுநர்தான் என்று காவல்துறையினர் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் அதனால் விபத்திற்கு பேருந்து ஓட்டுநர்தான் முழு காரணம் என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் இறந்தவருக்கும், காயமடைந்தவர்களுக்கும் 2 ஆம் எதிர்மனுதாரர் பேருந்து நிறுவனம்தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மேற்சொன்ன குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை.

Taken down by me in open Court In the Presence of the witness and Read over enterpreted to the Deponent and admitted by him her to be correct.

**III Additional District Judge**
**Puducherry.**